பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

05 03 2025 6 45
புதன்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள் -</u>

1. பிரதமர் திரு நரேந்திரமோடி வேலைவாய்ப்புத்துறை சார்ந்த திட்டங்கள் குறித்த இணையவழி கருத்தரங்கில் இன்று பங்கேற்கிறார்.
2. பணியில் சேரும் இளைஞர்கள் தேச நலனுக்கு முக்கியத்துவம் அளித்து பணியாற்ற வேண்டுமென தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் வலியுறுத்தியுள்ளார்.
3. நாடாளுமன்ற தொகுதி மறுவரையறை குறித்து விவாதிக்க முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் தலைமையில் இன்று அனைத்துக் கட்சிக் கூட்டம் நடைபெறுகிறது.
4. சென்னை கிழக்கு கடற்கரைச் சாலையில் நடைபெற்று வரும் ஆறுவழிச் சாலைப் பணிகள் வரும் மே மாதத்திற்குள் முடிவடையும் என்று மாநில அமைச்சர் திரு எ வ வேலு தெரிவித்துள்ளார்.
5. சாம்பியன்ஸ் கோப்பை கிரிக்கெட் போட்டியின் முதலாவது அரையிறுதியில் இந்தியா நான்கு விக்கெட் வித்தியாசத்தில் ஆஸ்திரேலியாவை வென்று இறுதிப்போட்டிக்கு முன்னேறியுள்ளது.

<u>*---- இனி விரிவான செய்திகள் ---*</u>

**[]<<<>>>[]**

பிரதமர் திரு நரேந்திரமோடி வேலைவாய்ப்புத்துறை சார்ந்த திட்டங்கள் குறித்த பட்ஜெட்டுக்கு பிந்தைய இணையவழி கருத்தரங்கில் இன்று பங்கேற்கிறார்.

பொருளாதாரம், புதுமை கண்டுபிடிப்புகள் மற்றும் மக்கள் நலத் திட்டங்களில் முதலீடு ஆகியவை தொடர்பாக இந்த கருத்தரங்கில் பிரதமர் உரையாற்றவுள்ளார்.

மத்தியில் பிரதமர் திரு நரேந்திரமோடி தலைமையிலான அரசு பொறுப்பேற்ற பின் புதிய வேலைவாய்ப்புக்களை உருவாக்குவதில் தீவிர கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

வேலைவாய்ப்புக்களை அதிகரிப்பதற்கான திட்டங்களையும் அரசு செயல்படுத்தி வருவதாகவும் மத்திய அரசு தெரிவித்துள்ளது.

அரசு, தொழில்துறை, கல்வி நிறுவனங்களுக்கு இடையேயான ஒத்துழைப்பை மேம்படுத்துவதன் மூலம் பட்ஜெட் அறிவிப்புகளை சிறந்த முறையில் நடைமுறைப்படுத்துவது குறித்தும் இன்றைய கருத்தரங்கில் விவாதிக்கப்படவுள்ளது.

வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்க நீடித்த வளர்ச்சி, தொழில்நுட்பம், திறன் மேம்பாடு, தொழிலாளர் நலன் போன்றவற்றில் கவனம் செலுத்துவது குறித்தும் இந்த கருத்தரங்கில் ஆலோசிக்கப்பட உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**[]<<<>>>[]**

வளமான இந்தியா – பாதுகாப்பான கடற்கரை குறித்த மத்திய தொழில் பாதுகாப்புப்படை விழிப்புணர்வு சைக்ளோத்தான் நிகழ்ச்சியை மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித்ஷா ராணிப்பேட்டை மாவட்டம் தக்கோலத்திலிருந்து நாளை மறுநாள் காணொலி வாயிலாக தொடங்கி வைக்கவுள்ளார்.

சென்னையில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய மத்திய தொழில் பாதுகாப்புப்படை ஐ ஜி திரு சரவணன், குஜராத் மாநிலம் லக்பத் கடற்கரைப் பகுதியிலிருந்து தொடங்கும் இந்த சைக்ளோத்தானில் தொழில் பாதுகாப்புப் படையைச் சேர்ந்த 14 வீராங்கனைகள் உட்பட 125 வீரர்கள் பங்கேற்பதாக கூறினார்.

<u>*( சவுண்ட்பைட் - சரவணன் ) ---55 – செகண்ட்*</u>

[]<<<>>>[]

பணியில் சேரும் இளைஞர்கள் தேச நலனுக்கு முக்கியத்துவம் அளித்து பணியாற்ற வேண்டுமென தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் வலியுறுத்தியுள்ளார்.,

புதுதில்லியில் இந்திய மக்கள் தொடர்பு பயிற்சி நிறுவனத்தின் பட்டமளிப்பு விழாவில் பேசிய அவர், உலக அளவில் தற்போது ஊடகத்துறை பெரும் மாற்றத்தை சந்தித்து வருவதாகக் கூறினார்.

அதற்கேற்ப மாணவர்கள் தங்களை தயார்படுத்திக் கொண்டு முன்னேறிச் செல்ல வேண்டும் எனவும் அவர் கேட்டுக் கொண்டார்.

இந்த பயிற்சி நிறுவனம் அதிநவீன வசதிகளுடன், உலகத்தரம் வாய்ந்ததாக மேம்படுத்தப்படும் என்றும் திரு அஸ்வினி வைஷ்ணவ் குறிப்பிட்டார்.

[]<<<>>>[]

நாடாளுமன்ற தொகுதி மறுவரையறை குறித்து விவாதிக்க முதுலமைச்சர் திரு மு க ஸ்டாலின் தலைமையில் இன்று அனைத்துக் கட்சிக் கூட்டம் நடைபெறுகிறது.

சென்னை தலைமைச் செயலகத்தில் நடைபெறும் இக்கூட்டத்தில் பங்கேற்க தேர்தல் ஆணையத்தில் பதிவுபெற்ற கட்சிகள் உட்பட சுமார் 40 கட்சிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

மக்கள் தொகை அடிப்படையில் மக்களவைத் தொகுதிகள் மறுவரையறை செய்வது குறித்து இந்த கூட்டத்தில் விவாதிக்கப்பட உள்ளது.

[]<<<>>>[]

சிறுபான்மையினர் நலனுக்காக மாநில அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருவதாக துணை முதலமைச்சர் திரு உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்,.

தமிழ்நாடு வக்ஃப் வாரியம் சார்பில் சென்னையில் நேற்று நடைபெற்ற இப்தார் நிகழ்ச்சியில் பங்கேற்று பேசிய அவர், திமுக ஆட்சிக் காலத்தில்தான் மிலாது நபி-க்கு அரசு விடுமுறை விடப்பட்டதாகக் கூறினார்.

உருது மொழி பேசும் இஸ்லாமியர்கள் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கப்பட்டதுடன், சென்னையில் உருது அகாடமி தொடங்கப்பட்டதையும் திரு உதயநிதி ஸ்டாலின் சுட்டிக்காட்டினார்.

[]<<<>>>[]

கிழக்கு கடற்கரைச் சாலையில் சென்னை கொட்டிவாக்கம் முதல் அக்கரை வரையிலான ஆறுவழிச் சாலைப் பணிகள் வரும் மே மாதத்திற்குள் முடிவடையும் என்று நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் திரு எ வ வேலு தெரிவித்துள்ளார்.

சென்னையில் நேற்று இந்த சாலைப் பணிகளின் முன்னேற்றம் குறித்து ஆய்வு செய்த பின் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்த சாலை விரிவாக்கத்திற்குத் தேவையான நிலத்தை கையகப்படுத்த ஆயிரம் கோடி ரூபாய் செலவிடப்பட்டிருப்பதாகக் கூறினார்.

இந்த வழித்தடத்தில் போக்குவரத்து நெரிசலை கட்டுப்படுத்த உயர்மட்ட சாலை அமைப்பதற்கான சாத்திய கூறுகள் குறித்தும் ஆய்வு செய்யப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

நீலாங்கரை – துரைப்பாக்கம் இடையே புதிதாக அமைக்கப்படும் சாலையில் ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்டவுடன் பணிகள் தொடங்கும் என்று திரு எ வ வேலு கூறினார்

[]<<<>>>[]

தமிழக அரசின் வேளாண் பட்ஜெட்டில் இடம்பெற வேண்டிய அம்சங்கள் குறித்து பொதுமக்கள் தங்களது கருத்துக்களைத் தெரிவிக்குமாறு வேளாண்துறை கேட்டுக் கொண்டுள்ளது.

இதற்கென பிரத்யேகமாக உருவாக்கப்பட்டுள்ள உழவர் செயலி மற்றும் **tnagribudget2025@gmail.com** என்ற மின் அஞ்சல் மூலமாகவும் கருத்துக்களைத் தெரிவிக்கலாம் என அரசு செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வரும் ஆண்டிற்கான மாநில அரசின் வேளாண் பட்ஜெட் இம்மாதம் 15-ஆம் தேதி சட்டப்பேரவையில் தாக்கல் செய்யப்படவுள்ளது.

[]<<<>>>[]

ஊட்டிக் கொடைக்கானல் போன்ற மலைவாசஸ்தலங்களில் சுற்றுலா வாகனங்கள் வருகையை கட்டுப்படுத்த மின்சார பேருந்துகள் மற்றும் கண்ணாடி பேருந்துகளை இயக்குவது குறித்து பரிசீலிக்குமாறு தமிழக அரசுக்கு சென்னை உயர்நீதிமன்றம் ஆலோசனை தெரிவித்துள்ளது.

இது தொடர்பான வழக்கை விசாரித்த நீதிபதிகள் திரு சதிஷ்குமார், திரு பரத சக்ரவர்த்தி ஆகியோர் அடங்கிய அமர்வு, சுற்றுலா வாகனங்கள் குறித்த ஐ ஐ டி மற்றும் ஐ ஐ எம் ஆய்வறிக்கை தாக்கல் செய்யப்படும் வரை குறைந்தபட்சமாக எத்தனை சுற்றுலா வாகனங்களை அனுமதிப்பது என்பது குறித்து வரும் 13-ஆம் தேதி அரசு தலைமை வழக்கறிஞர் விளக்கம் அளிக்க வேண்டுமென்று உத்தரவிட்டது.

[]<<<>>>[]

கிறிஸ்தவர்களின் தவக்காலமான சாம்பல் புதன் இன்று தொடங்குகிறது.

40 நாட்கள் நடைபெறும் இந்த தவக்காலத்தின் போது தேவாலயங்களில் சிறப்பு பிரார்த்தனைகள் நடைபெறவுள்ளது.

இதன் நிறைவாக ஏசுபிரான் உயிர்த்தெழுந்த தினம் ஈஸ்டர் பண்டிகையாக கொண்டாடப்படும்.

[]<<<>>>[]

பெண்களை வேளாண் தொழில் முனைவோராக உருவாக்கும் நோக்கில் மத்திய அரசு சிறப்புத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

வேளாண் தொழிலில் புதிய தொழில்நுட்பங்களை பயன்படுத்துவதற்கான பயிற்சியின் மூலம் சேலம் மாவட்டத்தில் 75 சதவீத பெண் தொழில் முனைவோர் உருவாகி இருப்பதாக தேசிய வேளாண் விரிவாக்க மேலாண்மை நிறுவனத்தின் முதன்மை தொடர்பு அலுவலர் திருமதி பூங்கொடி பிரபு எமது செய்தியாளிடம் தெரிவித்தார்.

*( சவுண்ட்பைட் - பூங்கொடி ) --- 35 செகண்ட்*

[]<<<>>>[]

ரஷ்யாவுடனான போர் நிறுத்தம் குறித்து அமெரிக்க அதிபர் திரு டொனால்டு ட்டிரம்புடன் பேச்சுவார்த்தை நடத்த தயாராக இருப்பதாக உக்ரைன் அதிபர் திரு விளாடிமிர் ஜெலன்ஸ்கி தெரிவித்துள்ளார்.

[]<<<>>>[]

பாலஸ்தீனத்தின் மேற்குக் கரைப்பகுதியில் இஸ்ரேல் படைகள் நடத்திய தாக்குதலில் ஹமாஸ் அமைப்பின் முக்கிய கமாண்டர் கொல்லப்பட்டார்.

[]<<<>>>[]

காசா மறுசீரமைப்புக்கான எகிப்தின் ஆலோசனையை அரபு நாடுகளின் தலைவர்கள் ஏற்றுக் கொண்டுள்ளனர்.

[]<<<>>>[]

வெளியுறவுத்துறை செயலர் திரு விக்ரம் மிஸ்ரி நாளை மறுநாள் ரஷ்யா செல்கிறார்.

[]<<<>>>[]

சர்வதேச மகளிர் தினத்தையொட்டி மகளிருக்கான மாதிரி கிராம பஞ்சாயத்து நிகழ்ச்சி புதுதில்லியில் இன்று தொடங்குகிறது.

[]<<<>>>[]

பிரயாக்ராஜில் நடைபெற்ற கும்பமேளாவின் போது புதுதில்லி ரயில் நிலையத்தில் ஏற்பட்ட நெரிசல் தொடர்பாக தில்லி ரயில்வே கோட்ட மேலாளர், ரயில்வே பாதுகாப்புப்படை உதவி ஆணையர் உள்ளிட்ட ஐந்து உயரதிகாரிகள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

[]<<<>>>[]

திண்டுக்கல் மாவட்டம் கின்னாளம்பட்டியில் நடைபெற்ற சமுதாய வளைகாப்பு நிகழ்ச்சியில் மாநில அமைச்சர் திரு ஐ பெரியசாமி கலந்து கொண்டு பயனாளிகளுக்கு சீர்வரிசைப் பொருட்களை வழங்கினார்.

[]<<<>>>[]

மயிலாடுதுறை மாவட்டம் பூம்புகார் சுற்றுலா வளாகத்தில் 23 கோடியே 60 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வரும் மேம்பாட்டுப் பணிகளை சுற்றுலாத்துறை அமைச்சர் திரு ராஜேந்திரன் நேற்று ஆய்வு செய்தார்.

[]<<<>>>[]

பிளாஸ்டிக் கப் மூலம் இட்லி தயாரிக்கப்படுவதாக வெளியான செய்தியை அடுத்து ஈரோட்டில் உணவுக் கடைகளில் உணவு பாதுகாப்புத்துறை அதிகாரிகள் நேற்று சோதனை மேற்கொண்டனர்.

[]<<<>>>[]

விழுப்புரம் மாவட்டத்தில் பிரசித்திபெற்ற மேல்மலையனூர் அங்காளம்மன் திருக்கோவில் மாசி மாத தேர்திருவிழா நேற்று வெகு விமரிசையாக நடைபெற்றது.

[]<<<>>>[]

சாம்பியன்ஸ் கோப்பை கிரிக்கெட் போட்டியின் முதலாவது அரையிறுதி ஆட்டத்தில் இந்தியா நான்கு விக்கெட் வித்தியாசத்தில் ஆஸ்திரேலியாவை வென்று இறுதிப்போட்டிக்கு முன்னேறியது.

துபாயில் நடைபெற்ற இப்போட்டியில் முதலில் பேட் செய்த ஆஸ்திரேலியா 49 புள்ளி மூன்று ஓவரில் அனைத்து விக்கெட்களையும் இழந்து 264 ரன் எடுத்தது,

265 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய இந்தியா 48 புள்ளி ஒரு ஓவரில் ஆறு விக்கெட் இழப்புக்கு 267 ரன் எடுத்து வெற்றிபெற்றது.

இரண்டாது அரை இறுதி ஆட்டத்தில் இன்று தென்னாப்பிரிக்கா – நியுசிலாந்து அணிகள் மோதுகின்றன.

இப்போட்டி லாகூரில் பிற்பகல் மணி 2-30-க்கு தொடங்குகிறது.

[]<<<>>>[]

குருகிராம் ஓபன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ஸ்ரீவள்ளி ராஷ்மிகா – வைதேகி சௌத்திரி இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

நேற்று நடைபெற்ற மகளிர் இரட்டையர் பிரிவு காலிறுதிக்கு முன்தைய சுற்றில் இந்த இணை 4-6, 7-6, 10-3 என்ற செட் கணக்கில் இந்தோனேஷியாவின் **Priska Madelyn.** ஜப்பானின் **yamazaki** இணையை வென்றது.

***End of News***